12th July 1962] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

தயங்குகிறார்கள். ஆகவே போலீஸாருக்குள்ள பயத்தை போக்கி அவர்கள் சமுதாயத்துக்கு நல்ல முறையில் தொண்டாற்ற, அவர்கள் செய்யவேண்டிய கடமையை சரியாகச் செய்வதற்கு ஒரு வழிவகை செய்யவேண்டிய பொறுப்பு யாருக்கு இருக்கிறது என்றால் அது அமைச்சருக்கு இருக்கிறது, அமைச்சரவைக்கு இருக்கிறது. ஆகவே ஒரு கமிட்டி போட்டு விசாரணை நடத்தட்டும். ஒழுங்கீனங்களைப் பற்றியல்ல. போலீஸ் பாலிஸியைப் பற்றி. தொழிற்சங்கத்திற்கு கோட் ஆப் காண்டக்ட், அரசியல் கட்சிகளுக்கும் ஒரு கோட் ஆப் காண்டக்ட் வேண்டுமென வலியுறுத்தினோம். தகராறுகளை சமாதான முறையில் தீர்க்க முயற்சிப்போம். சட்டங்கள் போதவில்லையென்றால் சட்டங்கள் இயற்ற முயற்சி எடுப்போம். சோஷலிஸ சமுதாயத்தை ஏற்படுத்தவேண்டுமென்பதுதான் என் கட்சியின் கொள்கை. அதைத்தான் காங்கிரஸ் கட்சியும் ஏற்றுக் கொள்கிறது. என்று சொல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும் அதுதான் தங்கள் லட்சியம் என்று சொல்கிறார்கள். சுதந்திரக் கட்சியைத் தவிர எல்லோரும் அதுதான் தங்கள் லட்சியம் என்று சொல்கிறார்கள். அப்படியிருக்க நம்மிடையே என் கருத்து வித்தியாசம் ஏற்படுகிறது. நீங்கள் சொல்வது ஒன்று, காரியம் வேறு என்று இருப்பதினால்தான் இந்த கருத்து வித்தியாசம் என்று கூறிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. மு. கருணாநிதி : சட்டமன்றத் தலைவர் அவர்களே, தினம் இங்கு விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ள காவல்துறை மான்யத்தில் எங்கள் சார்பில் அளிக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகள் மீது எனது கருத்துக்களை இங்கு கூற விரும்புகிறேன். சுமார் 34,600 பேர் பணியாற்றுகிற இந்த பெரிய இலாகாவைப் பற்றி மிகத் தீவிரமாகவும், நல்லெண்ணத்தோடும், நாம் அனைவரும் சிந்தித்து செயலாற்ற வேண்டிய கடமையுணர்ச்சியோடு இருக்கிறோம் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 34,600 பேர் என்று சொல்லப்படுகிற இந்த பெரிய நிறுவனத்தில் ஏறத்தாழ 24,000 பேர் கான்ஸ்டபிள் என்று சொல்லப்படுகிறது.

பழைய போலீஸ் அமைச்சராக இருந்து இன்று நிதியமைச்சராக இருக்கும் கனம் பக்தவத்சலம் அவர்கள் சொல்லக்கூடாது என்று ஒதுக்கி வைத்திருக்கிற காவலர் என்று அழைக்கப்படுகிறவர்கள் இருக்கிறார்கள். போலீஸார் என்று கூறுவதில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. காவலர் என்று கூறுவது களங்கமுடைத்தது என்கிற எண்ணமும் எங்களுக்குக் கிடையாது. இந்தப் போலீஸர் ஒரு பெரிய தியாக பரம்பரையை, நம் நாட்டில் உருவாக்கி வருகிறவர்கள், சிறப்பாகத் தமிழகத்தைப் பொறுத்த வரையில் சொல்ல வேண்டுமானால் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு, இந்திய துணைக்கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நம் மாநிலத்தில் இருக்கிற போலீஸார் தங்களுடைய கடமையை ஆற்றி வருகிறார்கள் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது.

[திரு. மு. கருணாநிதி] [12th July 1962

கடுமழையிலும், கொடிய வெயிலிலும், நள்ளிரவிலும் தங்கள் பணியினை கொலைகாரர்கள் மத்தியிலும், கள்வர்கள் இடையிலும் தங்கள் உயிரைப் பற்றிய கவலை இல்லாமல் மரணத்தை துச்சமாக மதித்து கடமைக்காக போராடி வருகிற அந்தத் தியாக சீலர்களை திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டுவதற்கு கடமைப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் உழைப்பின் மேன்மையை உணர்ந்து அவர்களுக்கு மேலும் பல சலுகைகள் வழங்கவேண்டுமென்று கேட்பதும் இந்த வெட்டுப் பிரேரணை மீது நான் எழுப்புகிற குரல் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். சென்னைமாநகரம் போன்ற சிலஇடங்களில் சென்ற ஆண்டு வரை காவல் நிலையம் என்று எழுதப்பட்டிருந்த பலகைகள் எல்லாம் திடீரென மாறி போலீஸ் ஸ்டேஷனாக காட்சியளிக்கின்றன. பெயர் மாற்றத்தில் அக்கறை இல்லாமல் பெயர் மாற்றம் என்றால் கேலிக்குரியது என்று கூறுகிற ஆளும் கட்சியினர் எவ்வளவு அக்கறையோடு அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்று எண்ணும்போது கொஞ்சம் வேதனை எங்களுக்கு ஏற்படாமல் இல்லை. காவல் நிலையம் என்பது நல்ல தமிழ்ச் சொல் என்ற காரணத்தினால் அந்த நல்ல தமிழில் அது பொறிக்கப்பட்ட நேரத்தில் நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியடைந்தோம். அதற்காக போலீஸ் அமைச்சராகிய இப்போது நிதியமைச்சராக இருக்கும் கனம் பக்தவத்ஸலம் அவர்களை நாங்கள் பாராட்டினோம். எங்களுடைய பாராட்டுக்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று நினைத்தார்களோ என்னவோ, அல்லது இவர்கள் என்ன நமக்கு பாராட்டுகளை தெரிவிப்பது என்று கருதினார்களோ என்னவோ, அந்த வார்த்தையை உடனடியாக "மாற்றுங்கள், மாற்றுங்கள்" என்று இந்த மாமன்றத்திலேயே அப்போது வந்திருந்த அதிகாரிகளிடத்தில் சொல்லுகின்ற முறையில் கூறினார்கள் அமைச்சர் அவர்கள். அதன் காரணமாக எல்லா இடங்களிலும் அந்த வார்த்தை மாற்றப்பட்டது. அதற்குக் கூறிய காரணம்தான் உள்ளபடியே எங்களைப் புண்படுத்தியது. இந்த மாமன்றத்தில் வீற்றிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களில் பெரும்பாலோர் இளைஞர்கள். அந்தப் பக்கத்தில் (காங்கிரஸ் பக்கத்தில்) உறுப்பினர்களாக வீற்றிருக்கின்றவர்கள் எல்லாம் பெரும்பாலும் வயதானவர்கள். இதை யாரும் மறுப்பதற்கில்லை. கடந்த தடவை இந்த மன்றத்தில் வெளியிடப்பட்ட "யார் யார்" என்கின்ற புத்தகத்தில், எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. நடராஜன் அவர்கள்தான் சட்டமன்ற உறுப்பினர்களில் இளைஞராக இருந்தார். இந்த தடவையிலும் எங்கள் கட்சியிலுள்ள திரு. வெங்கலம் மணி அவர்கள்தான் இளைஞராக இருக்கிறார்கள். ஆகவே இளைஞர்களாக இருக்கின்றவர்கள் ஏதாவது தவறுகள் செய்யலாம், உணர்ச்சி வசப்படலாம், அதன் காரணமாக அவசரப்பட்டு பேசிவிடலாம். ஆனால் அறுபதாவது ஆண்டு கொண்டாடிக்கொண்டிருப்பவர்கள், அறுபதாவது ஆண்டு கொண்டாடி முடிந்திருப்பவர்கள் எல்லாம் ஆளும் கட்சியிலிருக்கிறார்கள், ஆகவே அவர்கள் எதிர்க்கட்சியிலுள்ள எங்களை புண்படுத்தாத வகையில் பேசவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

12th July 1962] [திரு. மு. கருணாநிதி]

முன்னாள் போலீஸ் அமைச்சர் அவர்கள், போலீஸ்காரர்களை காவலர்கள் என்று சொல்லிவந்ததை, திருவொற்றியூரில் நடந்த திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் தங்களை "காவலர்கள்" என்று அழைத்துக் கொண்டதைக் கேட்டதும் உடனடியாக, "காவலர்கள்" என்று இருந்ததை மாற்றவேண்டும் என்று நினைத்தோம் என்று குறிப்பிட்டார்கள். அதற்கான ஆதாரத்தையும் நான் வைத்திருக்கிறேன். நாங்கள் அந்த வார்த்தையை உபயோகித்தோம், அதில் எச்சில் பட்டுவிட்டது என்று கருதி, அந்த வார்த்தை மாற்றப்பட்டது என்றால் நாங்கள் எவ்வளவோ வார்த்தைகளை உபயோகிக்கின்றோம், அவைகளை எல்லாமா இவர்கள் மாற்றுகின்றார்கள்? நாங்கள் அடிக்கடி 'மாவட்டம்' என்று உபயோகிக்கின்றோம், சர்க்கார் ஏடுகளில் இப்போது 'மாவட்டம்' என்றே பொறித்துக் கொண்டு வருகிறார்கள். அது மட்டுமல்ல, நாங்கள் அடிக்கடி 'அமைச்சர்' என்று உபயோகிக்கின்றோம். அதைப் பார்த்துவிட்டு "நீங்கள் அமைச்சர் என்று எப்படி சொல்லலாம், ஆகவே நாங்கள் அமைச்சர் என்ற பெயரை மாற்றிக்கொள்கிறோம்" என்று மாற்றுவார்களோ என்னவோ தெரியவில்லை. 'காவலர்' என்ற சொல் களங்கத்திற்குரிய சொல் தானா? இல்லை என்பதை திருவள்ளுவரை விட்டே பதில் கூற விரும்புகிறேன். (கனம் திரு. கு. காமராஜ்: திருவள்ளுவரை எப்படி இங்கே கொண்டுவருவீர்கள்?) நான் இலக்கியமாக பேசுகிறேன். திருவள்ளுவரை எப்படி கொண்டுவர முடியும், அதிலும் நீங்கள் இருக்கிற இந்த மன்றத்திற்கு எப்படிக் கொண்டுவர முடியும்? அவரே கூறியிருக்கின்றார் . . .

> "ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன் மறப்பர்
> காவலன் காவா னெனின்"

என்று திருவள்ளுவர் 'காவலன்' என்ற சொல்லால் அரசனைக் குறிப்பிடுகிறார். அரசனைக் குறிப்பிடுகின்ற சொல்லால் போலீசாரை அழைக்கலாமா, அவ்வளவு தகுதியா இவர்களுக்கு என்று அமைச்சர் அவர்கள் நினைக்கலாம். ஆனால் அமைச்சர் அவர்கள் சென்ற தடவை பேசிய பேச்சில் Friend, philosopher and guide என்று போலீசைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே காவலர், காவல் நிலையம் என்று சொல்வதில் தவறு அல்ல. அதே நேரத்தில் இப்போது போலீஸ் ஸ்டேஷன் என்றிருப்பதை மாற்றவேண்டும் என்று நான் கூறவில்லை. இருக்கின்ற அருந் தமிழை அழிக்கின்ற வகையில் ஏன் முயற்சி எடுக்கிறீர்கள்? அவ்விதமான முயற்சியில் தயவு செய்து ஈடுபட வேண்டாம் என்பதை மிகவும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த போலீஸ் துறையில் இருக்கின்றவர்களின் ஊதியத்தைப் பற்றி, அவர்களுடைய வசதிகளைப்பற்றி, அவர்களுடைய வீட்டு வசதியைப்பற்றி குறிப்பிடவிரும்புகிறேன். அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் 65 ரூபாயில் துவங்கி ஆண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயர்வு பெற்று 70 ரூபாய் அளவுக்கு வந்த பின்னால் இரண்டு ரூபாய் அளவுக்கு உயர்வு பெற்று கடைசியில் 90 ரூபாய் வரை

[திரு. மு. கருணாநிதி] [12th July 1962

யிலும் பெறுகிறார்கள். இவ்விதம் 90 ரூபாய் பெறுவதற்கு 15 ஆண்டுகள் வரையில் சேவை செய்தாகவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்த அடிப்படை சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சர் அவர்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். இதில் சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று சொல்லும்போது, ஆண் போலீசுக்கு மட்டுமல்ல, பெண் போலீசுக்கும் சேர்த்துத்தான்—பெண் போலீஸ் படையை நிறுவப்போவதாகவும் செய்தி வந்தது, சில பத்திரிகைகளில். அதைப்பற்றிக் கார்ட்டூன் போடப்பட்டதோடு அந்தச் செய்தி முடிந்துவிட்டது. அதைப்பார்த்துத்தானே என்னவோ, போலீஸ் வேலை இவ்வளவு கஷ்டமா, என்று எண்ணித்தான் பெண்கள் இதற்கு அதிகமான அளவில் அப்ளிகேஷன் போடவில்லையோ என்னவோ தெரியவில்லை. அதைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக்கிறேன். போலீசுக்கு கொடுக்கிற மாதச் சம்பளம், யூனிபார்ம் அலவன்ஸ், வைத்தியவசதி, கல்வி வசதி இவைகளை எல்லாம் சேர்ந்து கணக்கிட்டால் கூட 102 ரூபாய் வரையில்தான் பெறுகிறார்கள். இந்தச் சம்பளத்தைக் கொண்டு அவர்களுடைய குடும்பத்தை நடத்த முடியுமா? அவர்கள் ஏற்கனவே வீட்டு வசதி இல்லாமல் கஷ்டப்படு கிறார்கள், என்பதை எங்கள் கட்சியில் இருக்கின்ற "போலீஸ்" நண்பராக இருந்த திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் குறிப் பிட்டார்கள். அவர்களுடைய வீட்டில் போடப்படும் மின்விளக்கு 25 சக்தியுள்ளதாகத்தான் இருக்கிறது. இந்த மின்விளக்கை வைத்துக்கொண்டு எவ்விதம் குடும்பத்தை நடத்துவது, பல போலீஸ்காரர்கள் வீட்டுவசதி யில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பலவிதமான கஷ்டமான சூழ்நிலையில் தான் அவர்கள் தங்கள் குடும்பத்தை நடத்திக்கொண்டிருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சட்டசபையில் நடமாடுகின்ற போலீஸ்காரர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இப்போது நாள் ஒன்றுக்கு கொடுக்கப்படுகின்ற படிச்செலவு 10 அணா. இது போதுமா என்பதை அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். இங்கே வேலை பார்க்கின்ற பல போலீஸ்காரர்கள் நெடுந்தூரத்தில் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு எந்த விதமான பஸ் வசதியும் இப்போதில்லை. ஆகவே, அவர்களுக்கு பஸ்ஸில் வருவதற்கு பாஸ் வசதியாவது செய்து கொடுக்க வேண்டும். இம்மாதிரிப்பட்ட தேவைகளை எல்லாம் அவர்கள் என்னிடத்தில் வந்து சொன்னார்களா என்று கேட்டு, அப்படி இவர்களிடம் போய் சொல்லிவிட்டார்களா என்று நினைத்து, அதற் காக கொடுக்கமாட்டோம் என்று இருந்துவிடாதீர்கள். உண்மை யில் அவர்கள் இவ்விதம் உணருகிறார்கள். அதைத்தான் இந்த அமைச்சரவைக்கும் கனம் சபாநாயகர் அவர்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கின்றேன். அவர்கள் அதிக நேரம் வேலை செய்கின்றார்கள் என்றால் அவர்களுக்கு தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுவது போல் 'ஓவர் டைம் அலவன்ஸ்' போன்ற வசதிகள் அளிக்கப்படவேண்டும் என்பதோடு, இவர்களுடைய பிரச்னைகளையும் தொழிலாளர்களுடைய பிரச்னைகளைப்போன்று

12th July 1962] [திரு. மு. கருணாநிதி]

கவனிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவர்களுடைய வேலை நேரம் எட்டு மணி நேரம் தான் என்று சொல்லப்பட்டாலும், அன்றாடம் அவர்கள் அதிக நேரம் வேலை செய்கின்றார்கள். அப்பேர்ப்பட்ட நேரத்தில் எல்லாம் அவர்களுக்கு ஊதிய உயர்வுப்படி கொடுப்பதற்கு சர்க்கார் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆவடியில் இருக்கின்ற சிறப்பு ஆயுதப்படையினர் (எஸ்.எ.பி.) தலைமையிடத்திலிருந்து, வெளியில் சென்றால் ஒன்றே கால் ரூபாய் படி கொடுக்கவேண்டும் என்றிருந்தாலும் அதற்கு பதிலாக, மாதம் ஒன்றுக்கு 18 ரூபாய் சாப்பாட்டுச் செலவாக தரப்படுகிறது. இவ்விதம் கொடுக்கப்படும் படி சாப்பாட்டுக் கென்று கொடுக்கப்படும் நேரத்தில் சம்பளத்தில் சேர்ந்து வரும் பஞ்சப்படியை பாதியாக குறைத்துக்கொள்கிறார்கள். இதன் காரணமாக பல கஷ்டங்கள் அவர்களுக்கு ஏற்படுகின்றன. கல்யாணமானவர்களுக்கு மட்டும் வீட்டு அலவன்ஸாக ஏழு ரூபாய் கொடுக்கும்படியாக இருக்கிறது. 500 பேர்களுக்குத்தான் இந்தவிதமான அலவன்ஸ் தரப்பட்டிருக்கிறது. "இவர்களுக்கு ஏன் அலவன்ஸ், இந்த அலவன்ஸில் அவசியம் என்ன, 'கல்யாண மானவர்களுக்கு அல்லவா தெரியும், எனக்கு என்ன தெரியும்" என்று முதலமைச்சர் அவர்கள் கூறிவிட மாட்டார்கள் என்று கருதுகின்றேன், அவ்வாறு இல்லாமல் அங்கிருக்கின்ற அனைவருக் கும் இந்த அலவன்ஸ் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குற்றங்களின் பட்டியலை பூர்த்தி செய்யவேண்டும் என்பதற்காக நிரபராதிகளை அனாவசியமாக சேர்த்துவிடுகிறார்கள் போலீஸ் காரர்கள் என்கின்ற செய்தியை நான் இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. குற்றப்பட்டியல் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதற்காக யார் யாரையோ குற்றவாளி ஆக்குவது கூடாது. அம்பு எய்கின்றர்கள் உண்மையிலே ஒருபுறம் இருக்க, சாதாரண மாக இருக்கின்ற போலீஸ்காரர்கள் இதற்காக எங்கிருந்தாவது குற்றவாளிப்பட்டியலைத் தந்தாக வேண்டும் என்று பெரிய அதிகாரிகள் தொல்லை கொடுக்கின்ற நிலைமை ஏற்படுகிறது என்பதை பலர் கூறுகிறார்கள். 'எய்தவன் இருக்க அம்பை நோகின்றனரே? என்ற வகையில் பல ஆயிரக்கணக்கானவர்கள் பெருமூச்சுவிட்டபடி இருக்கிறார்கள் என்பதை மறந்து விடுவதற் கில்லை. நான் சொல்லுவதை யாரும் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம், போலீஸ்காரர்கள் அதிகாரிகளால் மட்டும், ஆட்டி வைக்கப்படவில்லை, அமைச்சர்களாலும் ஆட்டி வைக்கப்படு கின்றார்கள் என்கிற செய்தியை இந்த மன்றத்தில் சொல்வதின் மூலமாக அதற்கொரு நீதி கிடைக்கும் என்ற எண்ணத்தில் கூற விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் 'இருப்பு' என்ற கிராமத்தில் அரசியம்மன் கோவிலில் பழைய தர்மகர்த்தாவாக இருந்தவர் நீக்கப்பட்டார். அதன் பேரில் புதிய தர்மகர்த்தாவும் நியமித்தாகிவிட்டது. புதிய தர்மகர்த்தாவிடம் பழைய தர்ம

[திரு. மு. கருணாநிதி] [12th July 1962

க்ர்த்தா உடனடியாக பொறுப்பை ஒப்படைக்கவேண்டியது நியாயம். ஆனால் பழைய தர்மகர்த்தா நியாயமான முறையில் பொறுப்பை ஒப்படைக்கவில்லை. இதனால் புதிய தர்மகர்த்தா இப் பிரச்னையை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றார். நீதிமன்றத்தில் புதிய தர்மகர்த்தாவிடம் பொறுப்பு உடனடியாக ஒப்படைக்கப் படவேண்டும்; அதற்கு போலீஸ் சட்டபடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. ஆனால் சட்டப்படி நட வடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்கும் பின்னால் பழைய தர்ம கர்த்தாவிடமிருந்து பொறுப்பை வாங்கித் தருவதற்கு போலீஸார் நடவடிக்கை எடுக்க தயங்கியதின் காரணமாக புதிய தர்மகர்த்தா, திரும்பவும் நீதிமன்றத்திற்கு இதைக்கொண்டுபோனபோது நீதி மன்றத்தில் போலீஸாரை அழைத்து, "உடனடியாக இதன் மீது நடவடிக்கை எடுக்கிறீர்களா, அல்லது உங்கள் மீது நடவடிக்கை எடுக்கலாமா?" என்று கேட்டு கடுமையான கட்டளையை பிறப் பித்த பின்னால் போலீஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏன் போலீஸார் தயங்கினர் என்று கேட்டால், கனம் அமைச்சர் திரு. பூவராகவன் அவர்கள் இதில் தலையிட்டார் என்று செய்தி நம்பத் தகுநத இடங்களிலிருந்து கிடைத்திருக்கிறது. இதில் அவர்கள் தலையிட்டதற்கு காரணம், பழைய தர்மகர்த்தாவாக இருந்தவர், அமைச்சர் திரு. பூவராகவன் அவர்களுடைய அண்ணன் என்றும் தெரியவந்தது. இவ்விதம் அமைச்சர்களால் கூட போலீஸ் ஆட்டி படைக்கப்படுவது நியாயம்தானா, தர்மம் தானா, நீதிதானா—நீதி நிலைக்குமா என்பதை இந்த மன்றத்தில் தங்கள் மூலமாக கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மந்திரிகளுடைய வருகையின் போது போலீஸாருக்கு ஏற்படும் தொல்லைகள் எடுத்துச் சொல்லப்பட்டன. இங்கே கொடுத் திருக்கக் கூடிய இந்த மான்யங்களைப் படித்துப் பார்க்கும் நேரத்தில் மாவட்டங்களுடைய செயற் படை வீரர்களுக்கு ஆகக் கூடிய செலவு 1961-62-ம் ஆண்டில் 429.27 லட்சமாக இருந்தது 1962-63-ம் ஆண்டிலே 447.75 லட்சமாக உயர்ந்திருக்கிறது. இந்த உயர்வு ஏன் என்று நான் கேட்கவில்லை. பஞ்சப்படி உயர்வினால் இநத அளவுக்குச் செலவு உயர்ந்திருக்கலாம் என்று எடுத்துக் கொள்கிறேன். ஆனால் மலபார் போலீஸுக்கு 1961-62-ல் 18.68 லட்சமாக இருந்தது 1962-63-ல் 32.86 லட்சமாக ஏன் உயர்ந்தது என்று எனக்குப் புரியவில்லை. எந்த விதமான கட்சி குழப்பங் களும் அராஜகங்களும் நாட்டில் ஏற்படாத சூழ்நிலையில் இந்த அளவுக்கு உயருவதற்குக் காரணம் என்ன என்று பார்க்கும் போது, கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் மோட்டார் வாகனங்கள் வாங்குவதற்காக அதிகச் செலவு ஏற்பட்டது என்று எழுதப் பட்டிருக்கிறது. இவ்வளவு அவசரமாக மோட்டார் வாகனங்கள் ஏன் வாங்கப்பட்டன? அஸ்ஸாமில் கலகத்தைத் தடுப்பதற்காக நமது படை வீரர்கள் அழைக்கப்பட்டார்களே, அதற்காக வாங்கப்பட்டதா? அனுப்பப்பட்ட இந்த மாநில போலீஸா ருடைய செலவை மத்திய சர்க்கார் ஏற்றதா? அல்லது நமது மாநில சர்க்கார் ஏற்றுக்கொண்டதா? மாநில சர்க்கார் ஏற்றுக் கொண்டிருந்தால், மாநில சர்க்கார் ஏற்றது சரிதானா? அஸ்ஸாம்

கலவரத்தைத் தடுப்பதற்காக அனுப்பப்பட்ட காரணத்தினால் மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கவேண்டாமா? இந்தக் கேள்விகளுக்கு அமைச்சரிடத்திலிருந்து பதிலை எதிர்பார்க்கிறேன்.

போலீஸார் கஷ்டங்களை எடுத்துக் கூறி அவர்களுக்காக நாங்கள் வாதாடுவதால், போலீஸ்காரர்களை எதிர் கட்சிக்காரர்கள் தங்கள் பக்கம் இழுக்கப் பார்க்கிறார்கள் என்று பொதுவாக ஒரு கருத்து ஆளும் கட்சியிலிருந்து தெரிவிக்கப்பட்டது. அமைச்சர் அவர்கள் கூட அப்படித்தான் எண்ணுகிறார் என்று கருதுகிறேன் . . .

**கனம் திரு. கு. காமராஜ்:** அப்படி நினைக்கவில்லை. நீங்கள் போலீஸ்காரர்களை மிரட்டுகிறீர்கள். எப்படி மிரட்டுகிறீர்கள் என்று கேட்டால் உங்களிடம் தான் பத்திரிகை இருக்கிறது என்று பத்திரிகையில் எழுதுவது, கூட்டங்களில் பேசுவது என்ற முறையில் நீங்கள் மிரட்டுகிறீர்களே தவிர வேறு இல்லை.

**திரு. மு. கருணாநிதி:** மிரட்டக் கூடிய அதிகாரம் எங்களிடத்தில் இல்லை—மிரட்ட வேண்டிய அவசியமும் இல்லை. அப்படி மிரட்டியதாக—எந்தக் கூட்டத்திலாவது நாங்கள் அர்த்தமில்லாத முறையில், பண்பில்லாத முறையில், பேசியிருக்கிறோம் என்று—அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னால் அதற்கு நான் தலை வணங்கத் தயாராக இருக்கிறேன். போலீஸாருடைய கஷ்டங்களை எடுத்துக் கூறி வாதாடுவதால் நாங்கள் அவர்களை எங்கள் பக்கம் இழுக்கப் பார்க்கிறோம் எனக் கருதுகிறார்கள். நான் எழுதிய நாடகம்—"உதயசூரியன்" என்ற நாடகம்—சர்க்காரினால் தடை செய்யப்பட்டது. அப்படி தடை செய்யப்பட்டதற்கு என்ன காரணம் என்று போலீஸ் அமைச்சரிடத்தில் நேரில் சென்று நானும் என் தலைவர் அண்ணா அவர்களும் கேட்டோம். அப்போது அமைச்சர் அவர்கள் சில குறிப்புகளைக் காட்டி, இவைகளெல்லாம் ஆட்சேபகரமாக இருக்கின்றன என்று சொன்னார்கள். "அவைகளை விலக்கி விடுகிறேன், அனுமதி தாருங்கள்" என்று கேட்டோம். அவைகளை விலக்கி விட்டு அனுப்புங்கள் என்று சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். அவைகளைத் திருத்தி புத்தகத்தை அனுப்பினேன். வந்த தகவல் என்ன தெரியுமா?—நாடகம் தடை செய்யப்பட்டது ஒன்று என்ற தகவல் காதுகளுக்கு எட்டியது. போலீஸாருக்காக வாதாடியிருக்கிறீர்கள், இது தவறு. இதில் போலீஸாருடைய கஷ்டங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள்—இது மிகப் பெரிய தவறு. போலீஸாருடைய கண்ணீரைத் துடைக்க வழி தேடி திராவிட முன்னேற்றக் கழகம் போலீஸ்காரர்களைத் தங்கள் பக்கம் இழுத்து ஃபிரெஞ்சுப் புரட்சி போல் இதில் ஏதோ செய்வதாக எண்ணிக்கொண்டு இந்த நாடகத்தைத் தடை செய்ததாக நான் அறிகிறேன். ஆனால் முக்கியமாக இந்தக் காரணம் தான் சொல்லப்பட்டது. எனது பேச்சின் இறுதி கட்டத்தில் ஒன்றை மாத்திரம்—அந்த நாடகத்தில் ஆட்சேபகரமானது என்று சொல்லப்பட்ட அந்த தாலாட்டுப்

[திரு. மு. கருணாநிதி] [12th July 1962

பாட்டு என்ன என்று படித்துக் காட்ட விரும்புகிறேன்—தயவு செய்து யாரும் தாய்மார்கள் "சட்ட சபையிலே தாலாட்டா?" என்று கேட்டுவிடவேண்டாம். அந்த தாலாட்டுப் பாட்டு—

ஆராரோ . . . ஆரிரரோ . . . ஆணழகா! கண்வளராய்!
அஞ்சுபத்து சம்பளத்தில் மிஞ்சுவதில் வளரவந்த
அஞ்சுகமே! கண்வளராய்!
போலீசு வேலைக்கென்று போகின்ற நொப்பனுக்கு
புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண்வளராய்.
துப்பாக்கி எடுத்துகிட்டு போகின்ற நொப்பனிடம்
பழம்பாக்கி கேட்டுகிட்டு வழிமறிக்கும் கடன்காரன்
வருகின்ற காட்சிகளைக் காணுமல் கண்வளராய்.
நாடாளும் மந்திரிகள் நலியாமல் வாழ்வதற்கு
ஓடாகத் தேய்கின்ற அப்பாவின் புத்திரனே
குருவிக் கூடான வீட்டுக்குள்ளே தவழுகிற குலவிளக்கே!
கொசுக்கடிக்கு அஞ்சாமல் குவளை மலர்க் கண்வளராய்!
காக்கி உடை போட்டுகிட்டு சேப்பு தொப்பி மாட்டிகிட்டு
நாட்டை காக்கும் வீரனுக்கு உன்னைப் போல
நாலு வந்த பிறந்து விட்டால்
காவி உடை வேணுமடா; கமண்டலமும் தேவையடா!

இது தான் நான் அதில் எழுதியிருந்த பாட்டு. இந்தக் காரணம் காட்டி அந்தப் பாடல் தடை செய்யப்பட்டு நாடகம் தடை செய்யப்பட்டு விட்டது. நான் இவைகளையெல்லாம் சொல்லும் காரணத்தினால் எதிர் கட்சி ஒரேடியாக போலீஸை ஆதரிக்கிறார்கள், அப்படி ஆதரித்து அவர்களுடைய அன்பையும், குளிர்ச்சிப் பார்வையையும் பெறப் பார்க்கிறார்கள் என்று சொல்லி விடவேண்டாம். கழனியில் களை இருப்பது போல, நிலவில் களங்கம் இருப்பது போல சில பல போலீஸாருடைய கடமைகளில்—போலீஸாரிடத்தில்—களைகள் இருக்கின்றன, களங்கம் இருக்கின்றது, மாசு இருக்கின்றது. அத்தனை பேரும் மாசு அற்றவர்கள் என்று கூறமாட்டேன். அப்படி இருக்கும் காரணத்தினால் தான் சென்னையில் பல இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய படிப்பகங்கள் காலி செய்யப்படவேண்டுமென்று போலீஸாரால் மிரட்டப்படுகிறது. நேற்றைய தினம்கூட இந்த மாதிரி ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. பெரம்பூரில் 'சத்தியவாணிமுத்து படிப்பகம்' என்று ஒரு படிப்பகம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு படிப்பகம் இருக்கிறது. இந்த இரண்டு படிப்பகமும் இருக்கும் இடங்கள் யாருக்கும் சொந்தமானது அல்ல. காங்கிரஸ் படிப்பகத்திற்குப் பக்கத்தில் இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக சத்தியவாணிமுத்து படிப்பகத்தை உடனடியாக காலி செய்ய வேண்டுமென்று போலீஸார் அங்கே சென்று மிரட்டியிருக்கிறார்கள். சத்தியவாணிமுத்து அவர்கள் போலீஸ் கமிஷனரிடத்தில் இதைப் பற்றி முறையிட்டதாக நான் அறிகிறேன். நாகை தாலுகாவில் வேளூர், நீலப்பாடி, சோழங்கநல்லூர், ஓடாச்சேரி, குருமணங்குடி திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கத்தார். இன்றைய தினம் காமராஜருடைய அரவணைப்பைப் பெற்றிருக்கிறோம் என்ற எண்ணத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்

12th July 1962] [திரு. மு. கருணாநிதி]

தினரை வெறியாட்டம் நடத்தியும், பொருள் வாங்க வந்தவர்களை நையப் புடைத்தும் வருகிறார்கள். இதன் மீது போலீஸார் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற செய்தி கிடைத்துக் கொண்டே இருக்கிறது.

அதே போல, சென்னையில் இருக்கிற குடிசைப் பகுதிகளில்—போலீஸார் குற்றங்களைக் கண்டுபிடிக்கவேண்டாமென்று கூற வில்லை—குற்றம் செய்யாதவர்களை இழுத்து வருகிறார்கள். நானும், எனது கட்சிச் செயலாளர் திரு. மதியழகன் அவர்களும் நேரிலேயே கண்ட ஒரு சம்பவத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன். இரண்டு திங்களுக்கு முன் திடீரென்று நள்ளிரவு 12 மணிக்கு எனது வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கக் கூடிய குடிசைகள் பக்கத் திலிருந்து "ஐய்யோ, முறையோ" என்று சப்தம் வந்தது. வெளியே வந்து என்ன என்று பார்த்தால் போலீஸார் 200 பேர்களை சுற்றி வளைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த நேரத்தில் அங்கேயிருந்த தாய்மார்கள் என்னுடைய வீடு நோக்கி ஓடி வந்தார்கள். அவர்களைப் பார்த்து "என்ன" என்று கேட்டேன். போலீஸ்காரர்கள் கைது செய்கிறார்கள் என்று சொன்னார்கள் . . .

**திருமதி டி. என். அனந்தநாயகி:** ஆன் எ பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், கனம் அங்கத்தினர் முதலில் போலீஸாருக்குத் தாலாட்டுப் பாடிவிட்டு இப்போது போராடுகிறாரே, இதில் எதை நம்புவது?

**திரு. மு. கருணாநிதி:** அப்போதே நிலவிலே களங்கம் என்றேன்—அம்மையார் கவனிக்கவில்லை போலும். நான் உடனே மதியழகன் அவர்களை தொலைபேசி மூலம் கூப்பிட்டு, இரண்டு பேரும் அந்த இடத்திற்குச் சென்று விசாரித்தோம். அவர்கள் சொன்னார்கள், "அங்கே 2-3 பேர்கள் குற்றவாளிகள் இருக் கிறார்கள், அவர்களைப் பிடிக்க எல்லோரையும் வானில் ஏற்றிக் கொண்டு போகப்போகிறோம்" என்று. "2-3 பேர்கள் குற்ற வாளிகள் என்றால் யார் யார் குற்றவாளிகள் என்று சொல்லுகிறார் களோ அவர்களை மட்டும் பிடித்துக்கொண்டு மற்றவர்களை விட்டு விடுங்கள்" என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டோம். "சாட்சிகள் வேண்டும், அதற்காக, எல்லோரையும் இழுத்துக்கொண்டுதான் போவோம்" என்று சொன்னார்கள். அப்படியானால் "எங்களையும் இழுத்துச் செல்லுங்கள், சாட்சி வேண்டுமல்லவா, குச்சு வீட்டுக் காரர்களை மட்டும் இழுத்துக்கொண்டு போவானேன், குச்சு வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கக் கூடிய மச்சு வீட்டுக்காரர் களையும், மாளிகை வீட்டுக்காரர்களையும் சேர்த்து இழுத்துப் போங்கள் சாட்சியத்திற்காக" என்று சொன்னேன். "என்ன ஸார், இப்படி எங்கள் காரியத்தில் தலையிடுகிறீர்களே" என்று முணுமுணுத்து, ஏற்றியிருந்த 30-40 பேர்களில் 5-6 பேர்களைக் குறைத்து ஏற்றிச் சென்றார்கள். நள்ளிரவில் "ஐய்யோ, முறை யோ" என்று கதறியழும் நிலையில் ஏழை மக்களுக்கு தொந்திரவு கொடுக்கும் பயங்கரம் ஏற்படாமல் அந்த அளவுக்கு இருக்கக் கூடிய தூண்டுதல் கைவிடப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யத்தின் பேரில் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தி முடித்துக்கொள்கிறேன்.